தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
7 - DEC 1983
MADRAS-600 009

வெள்ளிக்கிழமை, 1983 மார்ச் 4.

மாசி, 20, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு—2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'' சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி''.

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு தன்னிடம் வைக்கப் பட்ட பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமையைப் போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.